[1978 மார்ச் 11

விஞ்ஞான பாடப் புத்தகங்கள்.

*515 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ் நாட்டுப் பாடப் புத்தகக் கழகத்தினால் வெளியிடப் பட்ட விஞ்ஞானப் புத்தகங்கள் எந்தவிதப் பயனின்றி வீணாகக் கிடக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

மூர் அங்காடி இடமாற்றம்.

*516 வினா—திரு. து. புருஷோத்தமன் திரு. என். கிட்டப்பா:— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மூர் அங்காடி இருக்குமிடத்தை இரயில் வேக்குக் கொடுத்துவிட அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மூர் அங்காடி எந்த இடத்திற்கு மாற்றப் படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு சென்னை மூர் அங்காடியை அடுத்துள்ள சில நிலங் களையும், அதைத் தவிர மூர் அங்காடி தற்போது இருக்கும் இடமும் தேவைப்படுகிறதென்று தென் பிராந்திய இரயில்வே நிர்வாகம் கேட்டிருக்கிறது. இப்பொருள் அரசின் பரிசீலனை யிலிருந்து வருகிறது.

(ஆ) இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை மாநகரிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மூர் அங்காடி இருந்துகொண்டிருக்கிறது. அந்த மூர் அங்காடி இருக்கும் இடத்தை இரயில்வே துறை கேட்பதை இந்த அரசு மறுத்து மூர் அங்காடி அந்த இடத்திலேயே இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1978 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இரயில்வே நிர்வாகம் கேட்டிருக்கிறது. அதற்கு மாற்று இடம் தேவைப்படு கிறது. மாற்று இடம் எது என்று இன்னும் முடிவு செய்யப் படாமல் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாற்று இடம் எது என்று இன்னும் முடிவு செய்யப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். மாற்று இடங்கள் எவை எவை பரிசீலனையில் இருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, **விவரம் இல்லை.**

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இப்போது மிருகக்காட்சி சாலை இருக்கக்கூடிய இடத்தையும் இரயில்வே இலாகா கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த இடத்தை கிரயமாகக் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது வேறு இடம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூர் அங்காடி இருக்கும் இடத்திற்கு அருகிலிருக்கும் அசோக் விஹார், எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் ஒரு பகுதி, மிருக காட்சி சாலை இருக்கும் இடம் ஆகியவைகளுக்கு 4 கோடியே 89 ஆயிரம் ரூபாய் அரசு நிர்ணயித்திருக்கிறது. அதைக் கொடுத்துவிட்டு அந்த இடங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு தெரிவித்திருக்கிறது. மூர் அங்காடிக்கு இன்னும் மாற்று இடம் முடிவாகவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி தவிர அங்கு வரலாற்று சிறப்பு வாய்ந்த 'மை லேடீஸ் கார்டன்', இருக்கிறது; தென்னிந்திய விளையாட்டுக் கழகம் இருக்கிறது; ஆந்திரா சபை இருக்கிறது. இப்பேர்ப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க இடங்களை இரயில்வே இலாகாவினர் கேட்டிருக்கிறார்களே? அவைகளுக்கு மாற்றும் இடம் தர அரசு முடிவு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்ட இடங்களை மட்டும்தான் கேட்கிறார்கள்.

[1978 மார்ச் 11

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி பற்றி ஏற்கனவே இரயில்வே இலாகாவுக்கு அதை விட்டுவிட்டு, மாற்று இடத்தை எடுத்துக் கொள்ளும்படி அரசாங்கம் கார்ப்பரேஷனுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால் ஏன் இன்னும் மூர் அங்காடி இடத்தைக் கேட்கிறார்கள்? இப்போது பரிசீலனையில் இருப்பது ஏற்கனவே வந்த அறிக்கையா அல்லது புதிதாக வந்த அறிக்கையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூர் அங்காடி இருக்கிற இடத்தைக் கேட்கிறார்கள் என்ற விவரம்தான் இருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி மாநகராட்சிக்கு வருவாய் தரக்கூடிய இடம். அதை ஒட்டியுள்ள சுற்றுப்புற பகுதிகளில், நடைபாதைகளில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் நிறைய கடைகள் இருக்கின்றன. அந்த கடைகளில் இருந்து கார்ப்பரேஷனுக்கு வரக்கூடிய வருமானத்தை தனியார் வசூல் செய்கிறார்களா அல்லது மாநகராட்சி குத்தகைக்கு விட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரங்கநாதன், தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள். இது மூலக் கேள்வியில் வராது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, மற்ற இடங்களில் கிடைப்பதைவிட இந்த மூர் அங்காடியில் குறைந்த விலைக்கு சில பொருள்கள் கிடைக்கின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது, இரயில்வே நிர்வாகத்தை விரிவுபடுத்துவதற்காக மூர் அங்காடியை கேட்பது பற்றியது.

திரு. ப. சந்திரன்: தலைவரவர்களே, சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் மூர் அங்காடிக்கு வந்து பொருட்களை வாங்குகிறார்கள். ஆகவே, பயணிகள் எளிதாக பொருள்களை வாங்குவதற்கு வசதியாக இந்த மூர் அங்காடியை சென்னை கடற்கரையில் அமைக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

1978 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் முதல்வர் இருக்கையில் அமர்ந்திருந்தார்.)

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. சட்ட அமைச்சர் எப்போது முதலமைச்சர் ஆனார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி தங்களுக்கு ஏன அவ்வளவு அக்கறை? அமைச்சர் வரிசையில் ஏதாவது ஒரு இடத்தில் உட்காரலாம்.

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIAR : I was having conversation with the Deputy Speaker. Therefore I happened to get situated there.

ஒன்றிய ஜீப்புகளுக்கு டீஸல் இயந்திரங்கள்.

* 317 வின—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஜீப் வாகனங்களுக்கு டீஸல் இயந்திரங்கள் அமைத்திடும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஜீப்களுக்கு பெட்ரோல் இந்த அளவுதான், அதாவது மாதம் 150 லிட்டர்தான் போட்டுக்கொள்ள வேண்டுமென்று விதி இருப்பதால், அந்த ஜீப்களுக்கு டீஸல் எஞ்சின் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக மலைப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்போது இருக்கின்ற ஜீப்களுக்கு டீஸல் இயந்திரங்கள் பொருத்தும் திட்டம் இல்லை.

(முற்பகல் 9-30)